செ.வெ. எண்: 602

நாள்: 20/07/2010

# தொடக்கக் கல்வித் துறை

## பத்திரிக்கைச் செய்தி

அரசு மற்றும் நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்துவிட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற அந்த மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் ரூ.50,000/– நிதி வழங்கப்பட அரசு உத்தரவிட்டதற்கிணங்க ஒவ்வொரு ஆண்டும் ரூ.50,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை தொடக்கக் கல்வித் துறையில் 398 மாணவ/மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மேலும் 202 மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ளது.

இவ்வாறு வழங்கப்படும் நிதி அரசு தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிதி நிறுவனம் (தமிழக அரசு நிதி நிறுவனத்தில்) வைப்புத் தொகையாக செலுத்தப்பட்டு அதில் இருந்து கிடைக்கின்ற வட்டித் தொகை மற்றும் அதன் முதிர்வுத் தொகை ஆகியவை அந்த மாணவ, மாணவியரின் கல்விச் செலவுக்காகவும் மற்றும் அவர்களது பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

இன்று (20.07.2010) 2010–11 ஆம் ஆண்டிற்கான 102 மாணவ மாணவியருக்கு வைப்புத் தொகை செலுத்தப்பட்டு வைப்புத் தொகை சான்று பள்ளிக் கல்வித் துறை செயலர் (பொறுப்பு) தலைமையில் **மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களால்** வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தொடக்கக் கல்வி இயக்குநர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டுள்ளனர்.

//

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

K N Rajasekaran
PA to Minister
School Edn